

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ சிவகாமியம்பா சமேத சிதம்பரேசுவரர் துணை.



# ந ற் சா ந் து ப ட் டி

## ஸ்ரீ சிவகாமியம்பா சமேத சிதம்பரேசுவரர் ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம்.

அருள் பெருகும் சிவகாமிஅனை, சிதம்பரேசுவரர்சீர், பொருள் பெருகு நற்சாந்துப் பொன்னகரத்தார் கோயில்,
தெருள் பெருகு கும்பாபிஷேக நலம் கண்டுய்வான், வருகஎன உலகினரை மகிழ்ந்தழைக்கும் பத்திரிகை.

**ஸ்ரீ சித்திவிநாயகர் துதி**

உலகுயர் செல்வம் எல்லாம் ஓரிடத்து அடைந்தேம் என்று
வலமுற வாழ்வோர் எல்லாம் மகிழுநற் சாந்துபட்டித்
தலமிசைக் கோயில் கொண்டு தன்அடைந்தார்கட்கு இன்பப்
பலனருள் அமலன், சித்திவிநாயகன் பதங்கள் போற்றி.

**ஸ்ரீ சிவகாமியம்பாள் துதி**

மேயபல் உலகம் எல்லாம் வேண்டுவ அளிக்கும் தெய்வத்
தாயென மறைகள் போற்றத் தன்அருள் வடிவு கொண்டு
நாயகனுடன், நற்சாந்து நகரத்தார் கோயில் மேய
ஆய் அருள் சிவகாமித்தாய் அடி, முடிக்கொண்டு வாழ்வாம்.

**ஸ்ரீ சுப்பிரமணியர் துதி**

திருவளர் குறமாதோடு தெய்வ குஞ்சரமும், பக்கல்
மருவ, நன்மயில் மீதேறி, மதி நலம் பெருகும் அன்பர்
உருவளர் அகமேபோல, ஓங்குநற் சாந்துபட்டிக்
குருவளர் கோயில் மேய குமரன்தாள் சென்னிசேர்ப்பாம்.

**ஸ்ரீ சண்டீசர் துதி**

விண்ணவரேனும் சிவபிரான பக்தி மேவிலார் ஆயின் நல்வினையும்
திண்ணிய பாவம் எனப்படும் என்று சிறுவிதி தெரிப்ப, அன்பினரேல்
மண்ணவரேனும் வெய்ய பாதகமும் மறுவில் நல் வினை எனப்படுமென்று
அண்ணல் அம்புவியில் தெரித்த சண்டீசர் அடிமலர் முடிமிசைப்புனைவாம்

**ஸ்ரீ சிதம்பரேசுவரர் துதி**

சீர்பூத்த நறசாந்துத் திருநகரில் தனவணிகர் சிறப்பச்செய்த
ஏர்பூத்த திருக்கோயிலில் காதல் மலிதர வந்திருந்து வாழும்
தேர்பூத்த தில்லைநகர்ச் சிவகாமி மகிழ்கூரும் சிதம்பரேசர்
நார்பூத்த திருவடிகள் நலம்பூத்த பேரன்பால் நயந்து வாழ்வாம்.

**வாழ்த்து**

வாழ்க அந்தணர்; வானவர், ஆனினம்;
வீழ்க தண்புனல்; வேந்தனும் ஓங்குக!
ஆழ்க தீயதெல்லாம்; அரன் நாமமே;
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

**மெய்யன்பர்களே!**

திருமலைசமுத்திரம் என்னும் நற்சாந்துபட்டியில் கோயில் கொண்டிருக்கும் சிவகாமி அம்பிகையுடனுறைய சிதம்பரேசுவர சுவாமிக்கும் பரிவார தேவதைகளுக்கும், நிகழும் விரோதிகிருது, தை. 21-ம் நாள். 4-2-1972 வெள்ளிக்கிழமை, கிருஷ்ணபட்சம், பஞ்சமி திதியும், ஹஸ்தநட்சத்திரமும், அமிருதயோகமும், நிஷ்பஞ்சகமும் லட்சுமியோகமும், கூடிய நன்னாளில் காலை மணி 10-16க்குமேல் 10-30 அளவில் மீன லக்கினத்தில் நடைபெறும் ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிடேகத்திற்கு வந்து, கண்டு, களித்து, வணங்கி, பேரானந்தப் பெருவாழ்வு பெறுமாறு வேண்டுகிறோம்.

**நிகழ்ச்சி விவரம்**

விரோதிகிருது ஹு தை மீ 19உ 1—2—'72 மங்களவாரம்
மாலை மணி 7-10க்கு மேல் 8-10 மணி அளவில் சிம்ம லக்கினத்தில்
**அநுக்ஞை - விக்னேசுவர பூஜை**

ஷை தினம் இரவு மணி 11-10க்கு மேல் 12-40 மணி அளவில்
**கடஸ்தாபனம்**

ஷை தினம் இரவு முதல் 21உ காலை வரை — **யாக பூஜை**

விரோதிகிருது ஹு தை மீ 21உ 4—2—'72 வெள்ளிக்கிழமை
காலை மணி 10-16க்கு மேல் 10-30 மணி அளவில்
மீன லக்கினத்தில்
**ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம்**

ஷை தினம் இரவு ஐம்பெரும் கடவுளர் திருவுலா

மல்குக வேதவேள்வி வழங்குக சுரந்து வானம்
பல்குக வளங்க ளெங்கும் பரவுக வறங்களின்பம்
நல்குக வுயிர்கட் கெல்லாம் நான்மறைச் சைவமோங்கிப்
புல்குக வுலகமெல்லாம் புரவலன் செங்கோல் வாழ்க.

ஸ்ரீ சிவகாமியம்பா சமேத சிதம்பரேசுவரர் திருவடி வாழ்க!

இங்ஙனம்

**தனவைசியர்களாகிய நற்சாந்துபட்டி நகரத்தார்.**

விரோதிகிருது, கார்த்திகை, 29உ.
நற்சாந்துபட்டி.

சி. என். பி. பிரஸ், கோவை. போன் : 30104

1972ம் ஆண்டு கும்பாபிஷேக அழைப்பிதழ்